மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் *1*, மாண்புமிகு உறுப்பினர் திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

தமிழ்நாட்டிலுள்ள சட்டக் கல்லூரிகள்

2796*--திரு. குழந்தை. தமிழரசன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சட்டக் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) அவைகளில் உள்ள பி.எல்., மற்றும் எம்.எல்., வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் இப்போது 4 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஒன்று சென்னையில், மற்றொன்று மதுரையில், பிறிதொன்று திருச்சியில், இன்னொன்று, கோவையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருநெல்வேலியில், ஒரு சட்டக் கல்லூரியை இவ்வாண்டு துவக்க அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோக சேலத்தில் தனியார் ஒருவருடைய சட்டக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) பி.எல்., மற்றும் எம்.எல். வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்:

1996 ஆகஸ்ட் 6]

பி.எல். 3 ஆண்டு படிப்புக்கு 684 இடங்கள். பி.எல். மாலைநேரக் கல்லூரிக்கு 689 இடங்கள். பி.எல். 5 ஆண்டுக் கல்விக்கு 594 இடங்கள் எம்.எல். 90 இடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் தனியார் சட்டக் கல்லூரி துவங்க அனுமதித்ததைப் போல, மற்ற இடங்களிலும் தனியார் சட்டக் கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : *தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளை ஊக்குவிக்கக்கூடாது என்பது அரசினுடைய கொள்கை. தனியார் கல்லூரிக்கு எதிராக அரசு ஏற்கனவே உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள தனியார் சட்டக் கல்லூரிக்கு அரசின் சார்பில் மாணவர்களைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த உன்னிகிருஷ்ணன் என்பவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அந்த வழக்கைத் தொடுத்ததில் தொழில் கல்விகளுக்கு எல்லாம் ஒரு அமைப்பின் மூலமாகத்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்புதான் இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எல்லா மாநிலங்களிலேயும் பின்பற்றப்படுகிறது. அதே அடிப்படையிலே, சட்டக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக சேலம் கல்லூரிக்கு அரசே மாணவர்களைத் தேர்ந்தெடுக்க முற்பட்டபோது, அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் உச்சநீதிமன்றத்தில் ஒரு தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, தற்போது அரசால் அந்த சேலம் கல்லூரிக்கு அரசு சார்பில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. என்றாலும் அந்தத் தடையாணையை

நீக்குவதற்கு தமிழக அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முகம்மது கோதர் மைதீன்.

திரு. முகம்மது கோதர் மைதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு சட்டக் கல்லூரியை இந்த ஆண்டிலே தந்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், இந்த ஆண்டு தொடங்க இருக்கக்கூடிய சட்டக் கல்லூரியில், மாலை நேரத்தில் மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ரெகுலர் கோர்ஸ், இயல்பாகவே உள்ள படிப்புக்கான இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான இடத்தைப் பெறுவதில் கொஞ்சம் சிரமம் எல்லாம் இருக்கிறது. எனவே, மாலை நேரக் கல்லூரி துவங்குவது பற்றி அரசு பரிசீலிக்கும். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு அது அனுகூலமாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. ஆவுடையப்பன்.

திரு. இரா. ஆவுடையப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் துவக்க இருக்கின்ற சட்டக் கல்லூரியில் நடப்பு ஆண்டில் 5 ஆண்டு சட்டப் படிப்பு கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, அதுவும் சேர்த்துத்தான் கற்றுக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குழந்தை. தமிழரசன்.

திரு. குழந்தை. தமிழசரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சட்டக் கல்லூரிகளில் படிக்கின்ற, பி.எல்., மற்றும் எம்.எல். மாணவர்களுடைய தேர்ச்சியில் முதல் வகுப்புத் தேர்ச்சியின் அளவு குறைவாக இருப்பதை இவ்வரசு அறியுமா? அப்படியிருந்தால், முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற

1996 ஆகஸ்ட் 6]

அளவிற்கு அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இவ்வரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பி.எல். படிப்பில் முதல் வகுப்பில் மாணவர்கள் தேறவில்லை என்ற உண்மையை நான் ஒத்துக்கொள்கிறேன். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இயக்குநர் அவர்களிடத்திலே நான் ஆலோசனை நடத்தி மாணவர்களுக்கு தனியாகப் பயிற்சி அளித்து ஒரு குறிப்பிட்ட சதவீத மாணவர்களாவது நிச்சயமாக முதல் வகுப்பில் 'ஃபர்ஸ்ட் கிளாஸ்' எடுக்கக் கூடிய அளவிற்கு சட்டக் கல்லூரிகள் முயற்சிக்கவேண்டுமென்று நான் பணித்திருக்கிறேன். அது அகில இந்திய அடிப்படையில் அந்த மாணவர்களுக்குத் துணை செய்வதாக அமையும். எனவே, உறுப்பினருடைய ஆலோசனைக்கு அரசு தீவிர கவனம் செலுத்துகிறது என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பா. துரைசாமி.

திரு. பா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகள் இல்லாத சட்டக் கல்லூரிகளுக்கு விடுதிகள் கட்ட அரசு ஆவனசெய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிகளுக்குப் போதுமான விடுதிகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மதுரையில் இருக்கிற சட்டக் கல்லூரி விடுதிக்குத் தேவையான மாணவர்கள்கூட சேரவில்லை. ஆனால் பிற ஏதாவது கல்லூரிகளுக்குப் போதுமான இடமில்லை என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரேயானால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும், புதிய கட்டிடங்கள் எழுப்பப்படும் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]